# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 10.06.2026**

**முன்னிலை**

## திரு முகம்மது ஷகீல் அ்ஃதர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். CP-119/SCIC/2023**

Thiru R. EDWIN FRANKLINE — புகார்தாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்
தலைமையிடத்து துணை
வட்டாட்சியர்
வட்டாட்சியர் அலுவலகம்,
ஸ்ரீபெரும்புதூர் வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம் 602 105. -- பொது அதிகார அமைப்பு

**ஆணை**

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ் 18.11.2022 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பிய மனுவில் திரு R. Edwin Frankline 03.09.2022 அன்று ஆவண எண். ஸ்ரீபெரும்புதூர் புத்தகம்-1/833/2022 இரசீது எண். 12047/2022, பழைய பட்டா எண் 2302 புல எண்.209, உட்பிரிவு எண்.27, பட்டா மாறுதலுக்கான விண்ணக்கப்பட்டுள்ளது இதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பான தகவல்களை கோரியுள்ளார். அதன் பின்னர் மனுதாரர் பிரிவு 18(1)ன் கீழ் 06.01.2023 தேதியிட்டு தனது புகார் மனுவினை ஆணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். அம்மனு வழக்கு எண்.CP-119/2023 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. இந்த புகார் மனுவின்மீது நேரில் விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு 15.12.2025 அன்று நடைபெறும் தமிழ்நாடு தகவல் ஆணைய நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு மனுதாரர் மற்றும் பொதுத் தகவல் அலுவலர் ஆகியோர்களுக்கு ஆணையத்தால் விசாரணை அறிவிப்பு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

3. 15.12.2025 அன்று நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுதாரர் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல் முறையீட்டு விதிகள், 2012) விதி 7-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மனுதாரரின் வருகையின்மை பதிவு செய்யப்பட்டது. பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு வெங்கடேசன், பொதுத் தகவல் அலுவலர் /தலைமையிடத்து துணை வட்டாட்சியர் அவர்கள் ஆஜராகியிருந்தார்.

4. விசாரணைக்கு ஆஜராகியிருந்த பொதுத் தகவல் அலுவலர் 12.12.2025 தேதியிட்டு மனுதாரருக்கு தகவல்கள் /பதில் வழங்கப்பட்டதாகவும் அதனை மனுதாரரின் மாமியார் அவர்கள் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகை விவரத்தினையும் ஆணையத்தின் முன் சமர்பித்தார்.

5. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனுவிற்கு உரிய காலத்திற்குள் தகவல்கள் வழங்கப்படவில்லையென்பதால் அப்போது பணியிலிருந்த பொதுத் தகவல் அலுவலர் திரு காசிலிங்கம் என்பவர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 20 (1) மற்றும் 20(2)ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான விளக்கத்தினை தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் மூலமாக ஆணையத்திற்கு சமர்பிக்க வேண்டும் என்றும் தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் மேற்குறிப்பிட்ட அலுவலரிடமிருந்து விளக்கத்தினை பெற்று 08.01.2026 அன்று ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி சமர்பிக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டிருந்தது

**6. மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவல்களை குறித்து தனது வாதுரையை எடுத்துரைக்க வாய்ப்பளிக்கப்பட்டும் அவர் 15.12.2025 அன்று நடத்தப்பட்ட விசாரணைக்கு ஆஜராகாததால் வழக்கானது முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.**

**7. 15.12.2025 அன்று உத்தரவிட்டவாறு திரு வெங்கடேசன் பொதுத் தகவல் அலுவலர் நேரில் ஆஜராகி முன்னாள் பொதுத் தகவல் அலுவலர் திரு காசிலிங்கம் அவர்களின் விளக்கத்தினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.**

**8. மேற்குறிப்பிட்ட திரு காசிலிங்கம் முன்னாள் பொதுத் தகவல் அலுவலர் அவர்களின் விளக்கம் ஆணையத்தால் பரிசீலிக்கப்பட்டது. அவரது விளக்கத்தினை ஆணையம் ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே திரு காசிலிங்கம் அவர்களுக்கு ரூ.5000/-(ஐந்தாயிரம் மட்டும்) அபராதம் விதிக்கப்படுகிறது. மேற்குறிப்பிட்டவாறு அபராதத்தினை அரசாங்கக் கணக்கில் செலுத்துவிட்டு அதன் விரத்தினை 22.06.2026 அன்று ஆணையத்தின் முன் ஆஜராகி சமர்பிக்க வேண்டும் என திரு காசிலிங்கம் முன்னாள் பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(முகம்மது ஷகீல் அ**ஃ**தர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP-119/SCIC/2023</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுத் தகவல் அலுவலர்
தலைமையிடத்து துணை
வட்டாட்சியர்
வட்டாட்சியர் அலுவலகம்,
ஸ்ரீபெரும்புதூர் வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம் 602 105.

திரு காசிலிங்கம்
முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்
தனி வட்டாட்சியர் (நில எடுப்பு)
பரந்தூர் விமான நிலைய விரிவாக்கம்,
ஸ்ரீபெரும்புதூர் வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம்

<u>மனுதாரர்:-</u>

Thiru R. EDWIN FRANKLINE
43/272A, SHAKTHI KOIL STREET
RAJAJIPURAM,
TIRUVALLUR (GH) BACK SIDE,
TIRUVALLUR 602 001.

<u>நகல்</u>

மாவட்ட ஆட்சியர்
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
காஞ்சிபுரம்.

JJ/PS